## சுருக்கம்

பணியமைப்பு – கலை பண்பாட்டுத் துறை – தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியம் – துணை இயக்குநர் நிலையில் உள்ள வாரிய செயலாளர் பணியிடம் திருச்சிராப்பள்ளிக்கு மாற்றம் செய்தது – கட்டாயக் காத்திருப்பில் உள்ள துணை இயக்குநர் திரு. இரா. குணசேகரன் அவர்களை பணியமர்த்தம் செய்வது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள்(பண் 1–1)த் துறை

அரசாணை (நிலை) எண். 77 நாள்:30.05.2014

திருவள்ளுவர் ஆண்டு 2045, வைகாசி –16

**படிக்கவும் :–**

1) கலை பண்பாட்டுத் துறை ஆணையர்(பொ) அவர்களின் செயல்முறை ஆணை எண்.6782/ஆ1/2013, நாள்:12.11.2013

2) அரசாணை(வா) எண்.328, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, நாள்:25.11.2013

3) திரு. இரா. குணசேகரன், துணை இயக்குநர் (கட்டாயக் காத்திருப்பு) அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம் நாள் 14.3.2014 மற்றும் 22.5.2014

4) அரசு கடித எண் 3346/பண் 1–1/2014–1, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண் 1–1) துறை, நாள் 18.3.2014 மற்றும் 27.5.2014

5) கலை பண்பாட்டுத் துறை ஆணையர்(பொ) அவர்களின் கடித ந.க.எண்.6782/ஆ1/2013, நாள் 27.5.2014

6) அரசாணை(நிலை) எண்.76, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண் 1–1) துறை, நாள்: 30.5.2014

********

### ஆணை

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையின் வாயிலாக கலை பண்பாட்டுத் துறையில் துணை இயக்குநர் ஆக பணியாற்றி வந்த திரு இரா.குணசேகரன் அவர்களை நிர்வாக நலன் கருதி கட்டாயக் காத்திருப்பில் வைத்து கலை பண்பாட்டுத் துறை ஆணையரால் ஆணையிடப்பட்டது. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் செயல்முறை ஆணைக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் பின்னேற்பு வழங்கப்பட்டது.

2. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில், 11.7.2011 அன்று துணை இயக்குநராகப் பதவி உயர்வு வழங்கப் பெற்று பணியாற்றி வந்த நிலையில் 12.11.2013 முதல் கட்டாயக் காத்திருப்பில் வைக்கப்பட்டதாகவும், பதினேழு ஆண்டுகள் கலை பண்பாட்டுத் துறையில் பணியாற்றிய தனது உழைப்பை கருதிப்பார்த்து மீண்டும் பணி வழங்குமாறு கட்டாயக் காத்திருப்பில் உள்ள திரு. இரா. குணசேகரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியச் செயலாளர் பணியிடத்தை (துணை இயக்குநர் நிலை) திருச்சிராப்பள்ளி மண்டல கலை பண்பாட்டு மையத்திற்கும், திருச்சிராப்பள்ளி மண்டல கலை பண்பாட்டு மைய உதவி இயக்குநர் பணியிடத்தை கலை பண்பாட்டுத் துறை இயக்ககத்திற்கும் மாற்றம் செய்தும், அவ்வாறு திருச்சிராப்பள்ளிக்கு மாற்றம் செய்யப்படும் செயலாளர் பணியிடத்தில் (துணை இயக்குநர் நிலை) தற்பொழுது கட்டாயக் காத்திருப்பில் உள்ள திரு இரா. குணசேகரன், துணை இயக்குநர் அவர்களை 01.03.2014 முதல் பணியமர்த்தம் செய்து ஆணை பிறப்பிக்குமாறும் கலை பண்பாட்டுத் துறை ஆணையர்(பொ) அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. மேலே ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத்தின் துணை இயக்குநர் நிலையில் உள்ள வாரிய செயலாளர் பணியிடம் 01.03.2014 முதல் காலியாக இருந்து வருவதால், அப்பணியிடத்தை திருச்சிராப்பள்ளிக்கு 1.3.2014 முதல் மாற்றம் செய்து ஆணையிடப்பட்டது.

5. கலை பண்பாட்டுத் துறை ஆணையர்(பொ) அவர்களின் கருத்துருவை கவனமாக பரிசீலித்து, அதனை ஏற்று, திருச்சிராப்பள்ளிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ள தமிழ்நாடு நாட்டுப்புற கலைஞர்கள் நலவாரிய செயலாளர் பணியிடத்தில் (துணை இயக்குநர் நிலை), தற்பொழுது கட்டாயக் காத்திருப்பில் உள்ள துணை இயக்குநர் திரு இரா. குணசேகரன் என்பவரை துணை இயக்குநர் நிலையில் தமிழ்நாடு நாட்டுப்புற கலைஞர்கள் நலவாரிய செயலாளராக பணியமர்த்தம் செய்து அரசு ஆணையிடுகிறது.

6. இவ்வாணையின்படி உடனடியாக பணி ஏற்குமாறு திரு. இரா. குணசேகரன், துணை இயக்குநர், கலை பண்பாட்டுத் துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை உடனடியாக அமலுக்கு வருகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ரா. கண்ணன்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
திரு. இரா. குணசேகரன், துணை இயக்குநர்
கலை பண்பாட்டுத் துறை, சென்னை – 8
(கலை பண்பாட்டுத் துறை ஆணையர் வழியாக)
ஆணையர்(பொ),
கலை பண்பாட்டுத் துறை, சென்னை– 8.
உறுப்பினர் செயலாளர்,
தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம், சென்னை – 8
செயலாளர்,
தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம், சென்னை – 8
(கலை பண்பாட்டுத் துறை ஆணையர் வழியாக)

சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9.
மாவட்டக் கருவூல அலுவலர் / சார்கருவூல அலுவலர், திருச்சிராப்பள்ளி
(கலை பண்பாட்டுத் துறை ஆணையர் வழியாக)
முதன்மை மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–18 / 35.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை மாநிலக் கணக்காய்வுத்
தலைவர் (பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை – 9.
நகல்:
முதுநிலை நேர்முக உதவியாளர், பள்ளிக்கல்வி அமைச்சர் அலுவலகம், சென்னை – 9
பணியாளர் (மற்றும்) நிர்வாக சீர்திருத்தத் (சி) துறை, சென்னை–9
நிதித் (கல்வி–II) துறை, சென்னை–9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை–9.
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பொது 2 / பண் 2)த் துறை,
சென்னை–9.
தொழில்நுட்ப இயக்குநர், தேசிய தகவல் மையம், சென்னை – 9
கோப்பு எண்.2460/பண் 1–1/2014 –க்கு ஒரு படி
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.